மன்/பாலையடிப்புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை
(மடு வலயம்)
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2020 – பகுதி1-பயிற்சி 19

நேரம்: 12 நிமிடங்கள்

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. அன்னையர் தினத்தில் 15 மாணவர்கள் தமக்கிடையில் வாழ்த்து மடல்களை பரிமாறிக் கொண்டார்கள். எனின் அங்கு பரிமாறப்பட்ட வாழ்த்து மடல்கள் எத்தனை?

1. 14 2. 210 3. 105

02. ஒரு முத்திரை வெளியீட்டு நிகழ்விலே கலந்து கொண்ட 12 பேர் தமக்கிடையே ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டனர். எனின் அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

1. 66 2.132 3.11


03. 12 △ 3 = 5 □3 எனின் இங்கு □, △ இற்கான கணிதச் செய்கைகள் முறையே,

1. +, X 2. X, + 3. X, ÷

04. ஒரு உணவு விடுதியிலே தரிக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிகளினதும் கார்களினதும் எண்ணிக்கை 30 ஆகும். அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 110 ஆகும் எனின் இங்குள்ள முச்சக்கர எண்டிகள் எத்தனை?

1. 15 2. 20 3. 10

05. இங்கே காணப்படும் வட்டங்கள் எத்தனை?



1. 5
2. 7
3. 6

06. ஒரு திருமண வீட்டிலே சிவப்பு , பச்சை , நீலம், மஞ்சள் என்ற ஒழுங்கில் 200 மின்குமிழ்கள் காணப்பட்டன. எனின் 47 ஆவது மின்குமிழின் நிறம் யாது ?

1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை

07. ஒரு தண்ணீர் தொட்டியின் கொள்ளவு 10l ஆகும். அண்ணா ஒரு தடவைக்கு 4l வீதம் தொட்டியில் நீரை நிரப்புகின்றான். ஆனால் தம்பி நீர் நிரப்பும் ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் 2l வீதம் நீரை வெளியே எடுக்கின்றான். எனின் அண்ணா எத்தனை தடவை நீரை ஊற்றும் போது முதன் முதலாகத் தொட்டி நிரம்பும்?

1. 3 2. 5 3. 4


08. ஒரு அலுவலகத்தில் வேலை செய்கின்ற ஆண்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையின் 3 மடங்காகும். புதிதாக 4 பெண்கள் வேலைக்கு சேர்ந்த பின்னர் ஆண்களினதும் பெண்களினதும் எண்ணிக்கை சமனாகியது எனின் தற்போது அலுவலகத்தில் உள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 12 3. 32

09. ஒரு முறையான நடைமுறையில் உள்ள பாடசாலையில் பரீட்சையானது 6ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து எட்டு நாட்கள் நடைபெற்றது எனின் பரீட்சை நடந்த இறுதி நாள் என்ன கிழமையாகும்?

1. திங்கள் 2. செவ்வாய் 3. புதன்

10. எண்கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?



1. 84 2. 88 3. 86

மன்/பாலையடிப்புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை
(மடு வலயம்)
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2020 – பகுதி 2 - பயிற்சி 14

❖ **பின்வரும் பந்தியினை வாசித்து விடையளிக்கவும்.**

ஓர் அரசரிடம் சேவகன் ஒருவன் வேலை செய்து வந்தான். அவனுக்குச் சுயமாக சிந்திக்கத் தெரியாது. ஒரு நாள் அரசர் அவனுடன் வெளியூர் சென்றார். வழியில் இருட்டிவிட்டது. எனவே அங்கிருந்த சத்திரத்தில் தங்க முடிவு செய்தார். சேவகன் குதிரையை வெளியில் உள்ள ஒரு மரத்திற்கட்டினான். அரசர் "சேவகனிடம் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் குதிரையைப் பார்த்துக் கொள்" என்றார்.

1. அசுவம் என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

   .....

2. சேவை செய்பவனை எவ்வாறு அழைக்கலாம்?

   .....

3. முதலாவது வாக்கியத்தின் எழுவாய் எது?

   .....

4. இங்கு ஒருவர் கூறிய கூற்றை அவ்வாறே எடுத்து காட்டுவதற்கு பயன்படுத்திய நிறுத்தக்குறியின் பெயர் யாது?

   .....

5. வழிப்போக்கர்களும் பயணிகளும் உணவுண்டு ஓய்வெடுத்துச் செல்லுமிடம் எவ்வாறு அழைக்கப்படும்?

   .....

6. வெளியூர் என்பதைப் பிரித்தெழுதுக?

   .....

நாம் சுகாதாரமாக வாழ்வது அவசியமானது. எனவே இன்றைய காலகட்டத்திற்கேற்ப **கொரோனா வைரஸ் இடமிருந்து பாதுகாப்பு பெறுவது எப்படி?** எனும் தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக. (ஒவ்வொரு வாக்கித்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும் எழுவாய் பயனிலை தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.**)


1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

சுருக்கமான விடை தருக.

பின்வரும் தகவல்களைக் கொண்டு 1,2,3 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.

2019ஆம் ஆண்டின் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தரம் ஐந்து மாணவர்களால் தமது பாடசாலை தோட்டத்தில் நடப்பட்ட பூச்செடி வகைகள் தொடர்பான தகவல்கள் இவ்வரைபில் தரப்பட்டுள்ளன.

1. நடப்பட்டுள்ள ஓர்கிட் செடிகளின் எண்ணிக்கை, மல்லிகைச் செடிகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். ஓர்கிட் செடிகளின் எண்ணிக்கையை வரைபில் காட்டுக.



2. மிகக் குறைந்த அளவில் நடப்பட்டுள்ள செடிவகையின் பெயர் என்ன?

……..……..

3. நடப்பட்டுள்ள செடிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

……..……..

4. ஒரு பாத்திரத்தில் 4 லீற்றர் 475 மில்லி லீற்றர் பால் உள்ளது. அது 5 சம போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ளன. எனின் ஒரு போத்தலில் உள்ள பாலின் அளவு எவ்வளவு ?

……..

5. எழுத்துகளில் தரப்பட்டுள்ள எண்களை உரோம இலக்கத்தில் எழுதுக.

1. ஆறு…… 2. பத்து……..

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இலங்கையின் ஒரே மாகாணத்தினூடாக இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன அவை
   1. மகாவலிகங்கை, வளவகங்கை 2. ஜின்கங்கை, களுகங்கை
   3. வளவகங்கை, களனிகங்கை 4. களனிகங்கை, களுகங்ககை
2. இலங்கையில் இலவசப் பாடநூல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
   1. 1948 2. 1980 3. 2000 4. 1996
3. டெங்கு நுளம்புகள் குத்துவது நாளொன்றின் எந்த நேரத்திலாகும்
   1. பகல் வேளை 2. இரவு 3. அதிகாலை 4. நள்ளிரவு
4. நிழலுக்காக வளர்க்கப்படும் தாவரம்
   1. சித்திரவேம்பு 2. தக்காளி 3. துளசி 4. கற்பூரவள்ளி
5. செக்கில் எண்ணெய் பிழிவதற்குப் பயன்படும் பிராணி
   1. குதிரை 2. யானை 3. கழுதை 4. மாடு